விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 341 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 09 சனிக்கிழமை (25.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அனைத்து மாவீரர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டு
### கனகபுரத்தில் நினைவேந்தலுக்கு ஏற்பாடு

(கிளிநொச்சி)

அனைத்து மாவீரர்களது பெயர்களும் பொறிக்கப்பட்டு நினைவேந்தலிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

நேற்று குறித்த குழுவினர் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கனகபுரம் மாவீரர் நினைவேந்தல் ஏற் 15

## சித்தன்கேணி இளைஞன் மரணம்
## சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாரை கைது செய்க
### யாழ்.நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு யாழ். நீதவான் ஏ.ஏ.ஆனந்த ராஜா 04

# நினைவேந்தலை முன்னெடுத்தால்
## கடும் சட்ட நடவடிக்கை நீதிமன்றத்தில் உறுதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை நினைவுகூர முயற்சிப்பவர்கள் மீது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் மற்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் உறுதியளித்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### ஓரிரு நாட்களில்
## க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்

(கொழும்பு)

இன்னும் ஓரிரு நாட்களில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாட்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் 15

## வவுனியாவில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் பாரவூர்தியுடன் துவிச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா நகர பள்ளிவாசலின் முன்பாக நேற்றுக் காலை இவ் விபத்து இடம்பெற்றது.

வவுனியா ஏ9 வீதியில் இருந்து ஹொரவப் பொத்தானை வீதியூடாக கோவில்குளம் நோக்கிச் சென்ற பாரவூர்தி நகர பள்ளி 15

## மாவீரர் நாள் நினைவேந்தலை தடை செய்ய வேண்டும்
### முல்லையில் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(முல்லைத்தீவு)

மாவீரர் நாளை நினைவுகூருவதனை தடைசெய்யும் நோக்கில் முல்லைத்தீவு பொலிஸாரால் தடை உத்தரவு கோரி நேற்று மாலை வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாவீரர் நாள் நெருங்கி வரும் நிலையில் மாவீரர்களை நினைவுகூருவதற்குரிய ஏற்பாடுகள் தமிழர் தாயக பிரதேசமெங்கும் நடந்து வருகின்றது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங் 15

## மகிந்தவுக்கு உயிர் அச்சுறுத்தல்


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்திற்கு முன்பாக சந்தேகத்துக்கிடமான முறையில் செயற் 15


## தனியார் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த
### விரைவில் புதிய முறைமை அறிமுகம்

(கொழும்பு)



தனியார் துறை ஊழியர்களின் ஆகக்குறைந்த அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக 15


ஓம் சாய் ராம்
கருணையூர் ஸ்ரீ அபய சீரடி சாய்நாதர் ஆலயம்
கார்த்திகை தீப திருநாளை முன்னிட்டு இடம்பெறும்
இலட்ச (100000) தீப வழிபாடு
26.11.2023 அன்று மேற்படி ஆலயத்தில் காலை 8 மணிமுதல் இரவு 7 மணி வரை இடம்பெறும்.
பங்கெடுத்து பலன் பெற அன்போடு அழைக்கின்றோம்.
இலங்கை வரலாற்றில் 2ஆவது வருடமாக ஆலயத்தில் இடம்பெற திருவருள் கைகூடியுள்ளது.

கரணவாய், கரவெட்டி.
விளம்பர உபயம் - சாய் பக்தர்கள்
(17988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் விபத்து; 5 பேர் படுகாயம்

வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 5 பேர் படுகாயமடைந்துள் ளனர்.

வவுனியாவிலிருந்து தேங்காய்களை ஏற்றி மதவாச்சி நோக்கி பயணித்த பார ஊர்தி ஒன்று மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பேரை மோதித்தள் ளியது.

இந்நிலையில் தேங்காய்களை ஏற்றி பயணித்த வாகன சாரதி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் அருகே விபத்துக்குள்ளானதில் வாகனத்தில் பய ணித்த இருவர் உட்பட ஐந்து பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# சங்கிலி அறுப்பு

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்கு ட்பட்ட அராலி பாலத்தடியில் வைத்து பெண் ஒருவரின் சங்கிலி ஒன்று நேற்று அறுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வீதியில் சென்றுகொண்டி ருந்த போதே இவ் வாறு சங்கிலி அறு க்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசார ணைகளை மேற் கொண்டு வருகின் றனர். (ம-7,104)


யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

அதிபர் திருமதி வாசுகி மன்மதராஜன் SLPS- II

(B.A, Dip in Edu, M.A, Med.)

அவர்களின்

60வது பிறந்ததின மணிவிழா வாழ்த்து



வாழ்வியல் பதிவுகள்
பிறந்த இடம் : உரும்பிராய்
தந்தைபெயர் : ஆசிரியமணி, பண்டிதர் அ.பஞ்சாட்சரம் (அதிபர்)
தாய்பெயர் : திருமதி ப.ஈஸ்வரி (ஆசிரியர்)
கணவன் பெயர் : திரு. இ.மன்மதராஜன் (ஆயுள்வேத வைத்தியர்)
மகன் : செல்வன் ம.தீர்த்தன்
ஆரம்பக்கல்வி : யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை
உயர்கல்வி : யா/இந்து மகளிர் கல்லூரி.

சேவை விபரம் - ஆசிரியர்

| | | |
|---|---|---|
| யா/வயாவிளான் மத்தியகல்லூரி | 17.08.1988 | 18.01.1990 |
| யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | 19.01.1990 | 01.07.1990 |
| யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் | 02.07.1990 | 10.06.2000 |
| யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் | 11.06.2000 | 12.11.2012 |

அதிபர்

| | | |
|---|---|---|
| யா/கோண்டாவில் இந்து மகாவித்தியால்யம் | 13.11.2012 | 12.11.2014 |
| யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை | 13.11.2014 | 10.07.2016 |
| யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை | 11.07.2016 | 24.11.2023 |

கைம்மாறு கருதாது கடமைதனை ஆற்றி
கலைமாணி, முதுகலைமாணி பட்டமும் பெற்று
அகவை அறுபதனை பூர்த்தி செய்து ஆனந்தமாய்
அவனியில் மேன்மையுடன் வாழ வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.
(17991)



ஈழத்திரை
செல்வா திரை அரங்கு
173/9 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
சுப்பர் ஸ்ரார் ரஜனி in
"ஜெயிலர்"
தினசரி - 10.30/2.30/6.30
அறிமுகக்கட்டணம் - 200/=
ஈழத்து குறும்படங்கள், முழு நீளத் திரைப்படங்கள் வெளியிடவும் காட்சிப்படுத்தவும் 100 பேருக்கான விசேட நிகழ்வுகள் நடாத்தவும்.
077 651 0375
(17992)



வேலைவாய்ப்பு
இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனத்திற்கு யாழ் கிளையில் பணியாற்றக்கூடிய காப்புறுதி விற்பனை முகாமையாளர் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் வேண்டப்படுகின்றனர்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு விபரங்களைஅனுப்பவும்.
077 171 2096
(17984)



Flight Ticket Bookings...
- இந்தியாவிற்கான வீசா ஏற்பாடுகள்
- யாழ்ப்பாணம்–சென்னை, கொழும்பு–சென்னைக்கான பயணச் சீட்டுக்களினை விசேட விலைகளில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Apex Travels - யாழ்ப்பாணம்
077 759 7598
(17993)



நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
கல்வியாண்டு 2024
தரம் - 6
30 மாணவர்களைக் கொண்ட குழு வகுப்பாக நடைபெறும்.
ஆரம்பம்-27.11.2023 திங். பி.ப 3.00மணி
077 796 0138
(17980)




வீடு விற்பனைக்கு
கொக்குவில் மேற்கில் 3 அறைகளுடன் கூடிய அழகிய வடக்கு வாசல் வீடு விற்பனைக்கு உண்டு.
076 105 6343
(17987)



காணி விற்பனைக்கு
மீசாலை மேற்கு டச்சு வீதியிலுள்ள நாற்புறமும் சுற்றுமதிலுடன் கூடிய நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
077 560 7641
077 081 4874
(17709)



31ம் நாள் நினைவு நாள்



பிறப்பு 03 - 02 - 1934
இறப்பு 27 - 10 - 2023

கடந்த 27.10.2023 அன்று இறைபதம் அடைந்த
எமது குல விளக்கு
அமரர்
வேலுப்பிள்ளை அன்னலட்சுமி

அவர்களின் 31ஆம் நாள் நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள் ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

உம் வட்டாரம்,
கோம்பாவில் துர்க்கா வீதி.
(C-7721)
தகவல் - குடும்பத்தினர்
077 023 4387



2 ஆம் ஆண்டு நினைவுகளில்...
அமரர்
முத்துராசா இரவீந்திரன்
(முன்னாள் அதிபர் - கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)



திதி : 25.11.2023

காலங்கள் ஒவ்வொன்றாய் கடக்கிறது
நினைவுகளோ உன் மீது குவிந்துகிடக்கிறது
நீயற்ற பொழுதுகளின் சுமைகள் கனக்க
விதியின் வழி பயணிக்கிறது வாழ்க்கை

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை
இறைஞ்சுகிறோம்.
(C-7720)

தோற்றம் 16.07.1968 மறைவு 17.11.2021
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி வரிச்சலுகையை தொடர
# இலங்கைக்கு இடமளிக்கும் ஐரோப்பிய ஒன்றியம்
## மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

**(கொழும்பு)**
**மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டிருக்கின்ற போதிலும், இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இடமளித்திருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் வெளியிட்டுள்ளது.**

இலங்கை அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பவற்றின் சுயாதீனத்தன்மை மற்றும் செயற்திறன் என்பன அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் விளைவாகக் கேள்விக்கு உள்ளாகி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை 2010 ஆம் ஆண்டு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இழந்ததுடன், மனித உரிமைகள்சார் மறுசீரமைப்புக்கள் தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு அமைவாக மீண்டும் 2017 ஆம் ஆண்டில் அச்சலுகையை மீளப் பெறப்பட்டது.

இருப்பினும் அந்த உத்தரவுகள் இன்னமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால், ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ச்சியாகவும், பகிரங்கமாகவும் கரிசனைகளை வெளியிட்டு வந்தது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தக்க வைத்துக் கொள்ள இலங்கை செயற்றிறன் மிக்க முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியிருந்தது எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சீனிக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)
இலங்கையில் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதை தொடர்ந்து, சீனி பற்றாக்குறை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சந்தையில் சீனியின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது ஒரு கிலோ வெள்ளை சீனி 320 ரூபாவுக்கும் சிவப்பு சீனி 370 ரூபாவுக்கும் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், சந்தையில் நிலவும் சீனி பற்றாக்குறை காரணமாக இனிப்பு வகைகள் மற்றும் பிஸ்கட் உற்பத்தியாளர்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ச.தொ.ச மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக மக்களுக்கு நியாயமான விலையில் சீனி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# முறைப்பாடுகளை முறையிட 1977

(கொழும்பு)
இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் 20 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட சோத னையில் 24 கோடி ரூபாய் அபராதமாக வசூலிக்க முடிந்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்து ள்ளது.

22,000 சோதனைகளில் 3,151 அரிசி தொடர்பான சோதனைகளும் 510 சீனி தொடர்பான சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் கொள்வனவு செய்யும் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களின் பாதுகாப்புக்காக அனைத்து மாவட்டங்களிலும் சோதனைகள் மற்றும் விசாரணைகளை தீவிரப்படுத்த நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோர் முறைப்பாடுகள் தொடர்பான தகவல்களை நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தொலைபேசி இலக்கமான 1977 இற்கு வழங்குமாறும் அதிகாரசபை பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறது. (நி-5-6)

# ஒக்டோபரில் மட்டும் 485 எயிட்ஸ் நோயாளர்கள்

(கொழும்பு)
ஒக்டோபர் மாதக் காலப்பகுதியில் புதிதாக 485 எயிட்ஸ் நோய் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டப்பணிப்பாளர், சமூக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஜானகி விதானபத்திரண தெரிவித்துள்ளார்.

இதன்படி எச்ஐவி நோய் தொற்றாளர்களில் அதிகமானோர் பாடசாலை மாணவர்களும் 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்களும் பதிவாகியுள்ளனர். (நி-5-6)

# மழை தொடருமானால் மின்கட்டணத்தில் சலுகை

(கொழும்பு)
மழை தொடருமானால் எதிர்காலத்தில் மக்களுக்கு மின்சாரக் கட்டணத்தில் நிவாரணம் வழங்க முடியும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதில் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது முழுத் திறனையும் உபயோகித்து நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருவதால் திடீரென விலையை குறைக்க முடியாது.

நிவாரணம் வழங்கப்படுமாயின் அதனை அமைச்சரவைக்கு அறிவித்து அந்த நிவாரணத்தை மக்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார். (நி-5-6)



# பொலிஸ் காவலிலுள்ள சந்தேகநபர்களின் மரணங்கள் அதிகரிப்பு-நிமல் புஞ்சிஹேவா

(கொழும்பு)
பொலிஸ் காவலில் உள்ள சந்தேகநபர்களை கையாள்வதற்கான புதிய வழிகாட்டுதல்களை தாம் தயாரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆ ை ண க ் கு மு தெரிவித்துள்ளது.



பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் மரணங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.

இந்த ஆண்டில் இதுவரை 20 இற்கும் மேற்பட்டோர்பொலிஸ் காவலில் இறந்துள்ளனர்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு டிசெம்பர் 11 ஆம் திகதி வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (நி-5-6)

# வைத்தியர்கள் வெளிநாடு செல்வது குறைவடைந்துள்ளது-சுகாதார அமைச்சு

(கொழும்பு)
கடந்த மூன்று வாரங்களாக வைத்தியர்கள் வெளிநாடு செல்லும் போக்கு குறைந்து வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தற்போது கல்வி மற்றும் இதர விடயங்களுக்காக வெளிநாடு செல்லும் வைத்தியர்கள் குறைவடைந்துள்ளது.

இதேவேளை, விசேட பயிற்சிக்காக வெளிநாடு சென்ற வைத்தியர்கள் தற்போது பயிற்சிகளை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதாக தெரிவித்த செயலாளர், எதிர்காலத்தில் வெளிநாடு செல்லும் வைத்தியர்களின் எண்ணிக்கையை மேலும் குறைக்க முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# இலங்கையில் குழந்தைகள் கடத்தப்பட்டு வெளிநாட்டவர்களுக்கு விற்பனை
## விசாரணைகள் தீவிரம்

(கொழும்பு)
இலங்கையில் இருந்து அதிகளவிலான குழந்தைகள் கடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கடத்தல் தொடர்பாக நோர்வேயில் இருக்கும் இல ந்து முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் குழந்தைகளை கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் கும்பல் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிரப்படுத்தியுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உயர் நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பரபரப்பான இருபது-20 போட்டியில் இந்தியா திரில் வெற்றி





அவுஸ்திரேலியா அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், இந்திய அணி 2 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறை வில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஸ் இங்லீஸ் 110 ஓட்டங்களையும் ஸ்ரீபன் ஸ்மித் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியக் அணியின் பந்துவீச்சில், பிரசீத் கிருஸ்னா மற்றும் ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 209 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியக் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை அடைந்தது. இதனால், இந்திய அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 42 பந்துக ளில் 4 சிக்ஸர்கள் 9 பவுண்ரிகள் அடங்களாக 80 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட சூர்யகுமார் யாதவ் தெரிவு செய்யப்பட்டார்.

ஐந்து போட்டிகள் கொண்ட குறித்த தொடரில், 1-0 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபது-20 போட்டி, நாளை திருவானந்தப்புரத்தில் நடைபெறவுள்ளது. (நி-5-6)

## ஹோலியின் இடத்தில் ருதுராஜ் காய்நகர்த்தும் கிரிக்கெட் சபை





இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஹோலியின் இடத்தில் களமிறங்க மாற்று வீரரை தயார்படுத்தியுள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை.

இதன்படி விராட் ஹோலிக்கு மாற்றாக ஒருநாள் கிரிக்கெட்டில் இனி ருதுராஜ் கெய்க் வாட் செயற்படுவார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ருதுராஜ் கெய்க்வாட் அண்மையில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின்போது இந்திய அணிக்கு தலைவராக இருந்தார்.

இதனைத் தொடர்ந்து, தற்போது அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ரி-20 தொடரில் ருதுராஜ் கெய்க்வாட்டிற்கு துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அவர் மூன்றாவது இடத்தில் விளையாடும் வகையில் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், இனி கெய்க்வாட் மூன்றாவது இடத்தில் களமிறங்கி, வருங்காலங்களில் அணித் தலைவராகவும் விளையாட வாய்ப்பிருப்பதாக கருதப்படுகிறது. (நி-6)

## சம்பவத்துடன்...

முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொலிஸாரால் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் உயிரிழந்தவரின் தரப்பினர் சார்பில் 40க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் நேற்று மன்றில் ஆஜராகியிருந்தனர்.

நேற்றைய வழக்கு விசாரணையின்போது சிறைச்சாலை பாதுகாவலர் இருவர், சித்திரவதைக்குள்ளானதாகக் கூறப்படும் மற்றைய இளைஞர் மற்றும் ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியர், சட்ட வைத்திய நிபுணர் ஆகியோரிடம் சாட்சிகள் பதிவு செய்யப்பட்டன

சம்பவத்தில் உயிரிழந்த நாகராஜா அலெக்ஸ், சித்தன்கேணி பகுதியிலுள்ள கலைவாணி ஒழுங்கை - ஞான வைரவர் ஆலயத்தில் இருந்தபோது மரக்கடத்தல் வழக்கு தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டதாக காயமடைந்த மற்றைய இளைஞர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அத்துடன், தன்னையும் அலெக்ஸையும் பொலிஸார் 04 நாட்களாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல், பல்வேறு பகுதிகளுக்கு அழைத்துச் சென்று அடித்து துன்புறுத்தியதாகவும் அவர் சாட்சியமளித்துள்ளார்.

நாகராஜா அலெக்ஸ் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்ட பொலிஸார், அவரை தலைகீழாக தொங்கவிட்டு துன்புறுத்தியதாகவும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றைய இளைஞரால் நேற்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, யாழ்.போதனா வைத்திய [illegible] சாட்சியம் பெறப்பட்டது.

நாகராஜா அலெக்ஸ் என்பவரின் மரணம் இயற்கையான மரணம் அல்லவெனவும் துன்புறுத்தலால் ஏற்பட்ட காயங்களினால் இந்த மரணம் இடம் பெற்றுள்ளதாகவும் இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவரது நெஞ்சு, வயிற்றுப் பகுதிகளில் நீர் நிரம்பியதால் சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சாட்சியமளித்துள்ளார்.

இந்த நிலையில், நீண்ட நேரமாக நாகராஜா அலெக்ஸின் கைகள் விலங்கிடப்பட்டிருந்தமையினால், தம்மால் உரிய சிகிச்சைகளை வழங்குவதில் சிக்கல் உள்ளதாகவும் அவரை உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு தாம் அறிவித்ததாகவும் ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியரினால் மன்றில் நேற்று சாட்சியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் இவ்வாறு தாக்கப்பட்ட வேறு நபர்களை அழைத்து வந்தார்களா? என மன்றில் கேள்வி எழுப்பப்பட்டபோது இதுவே முதல்தடவை என வைத்தியர் தெரிவித்தார்.

இதனிடையே, சந்தேகநபர்கள் துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படும் இடங்களில் காணப்பட்ட CCTV காட்சிகளும் நீதவானின் கவனத்திற்கு நேற்று கொண்டுவரப்பட்டன.

இந்த விடயத்துடன் தொடர்புடைய அனைவரையும் நீதியான விசாரணைக்கு உட்படுத்தி அடையாள அணிவகுப்பை மேற்கொள்ளுமாறு சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது.

விடயங்களை ஆராய்ந்த நீதவான், சம்பவத்துடன் தொடர்புடைய 02 பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் சம்பவத்துடன் தொடர்புடைய இடங்களை தடயவியல் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சோதனை செய்யுமாறும் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தெய்வேந்திரன் மேனனுக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று கடமையிலிருந்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தாக்குதலுடன் தொடர்புடையதாக கூறப்படும் ஏனைய பொலிஸ் அதிகாரிகளிடமும் விசாரணைகளை மேற்கொண்டு, அவர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றைய இளைஞருக்கு பொலிஸாரின் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அவரது பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்துமாறும் நீதவானிடம் சட்டத்தரணிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனை கருத்திற்கொண்ட யாழ். நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா, குறித்த இளைஞரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் உடனிருக்குமாறு இரு சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் சாட்சி வழங்குவதற்காக பொலிஸாரினால் பட்டியிலிடப்பட்டவர்களை மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7,33,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு எச்சரிக்கை

**(கொழும்பு) —**

**தொடரும் மழையுடனான வானிலை காரணமாக எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது.**

நவம்பர் மாதத்தின் மூன்று வாரங்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 63,540 ஆக உயர்ந்துள்ளதுடன் 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

நவம்பர் மாதத்தின் கடைசி 18 நாட்களில் மட்டும் 3,844 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சமூக மருத்துவர் நிமல்கா பன்னிலஹெட்டி தெரிவித்துள்ளார் .

இவ்வாறு டெங்கு நோயாளர்கள் பதிவாகுவதற்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளின் பற்றாக்குறையே காரணமாகும்.

தொடரும் மழையுடனான வானிலை காரணமாக தொற்றுநோயியல் பிரிவினால் அதிக ஆபத்துள்ள 45 டெங்கு பரவும் பகுதிகளை அடையாளம் கண்டுள்ளதாக டெங்கு தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நவம்பர் மாத இறுதியிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் டிசம்பர் மாத நடுப்பகுதியிலும் டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக டெங்கு தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது . (நி-5-6)






**36 ஆவது பிறந்ததினமும் 5 ஆம் மாத நினைவும்**

**மகேஸ்வரன் மயூரன் (மயூரன் மாஸ்டர்)**

(யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 - 11 - 1987 | 29 - 06 - 2023 |

கார்த்திகையில் உதித்த என் அன்புக் கணவன் மயூரன்.
குடும்பத்தில் தாய் தந்தையரின் அன்பு மகனாய் சகோதர சகோதரிகளின்
பாசமிகு சகோதரனாய் எனது பாசமான கணவனாய் சேவையில்
சேவகனாய் உபதேசம் கூறுவதில் உத்தமனாய்.
நண்பர்களுக்கு நண்பனாய் நீ திகழ்ந்த போதும் உன் வாழ்வை
நிலை கொள்ள வைக்க என்னால் முடியவில்லை.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பதுபோல தையில் நம் வாழ்க்கை ஆரம்பமாகியது.
இறைவன் போட்ட முடிச்சு என்று வாழ்ந்து வந்தோம். என் குடும்பத்தையும்
உங்கள் குடும்பம் போல பாசம் வைத்தாய். எங்கு சென்றாலும் உங்கள் கூடவே
என்னையும் அழைத்துச் செல்வாய் கேள்விக்கு பதிலாய் புன்னகையே தருவாய்.

நீ என்வாழ்வில் வந்த பின்பு பலமாற்றங்கள் உருவானது. எல்லாம் கனவாகும்.
என்று கனவிலும் நினைக்கவில்லை.நம் சந்தோஷத்தை பொறுக்காத கடவுள் செய்த
சதி நம் வாழ்க்கை தடம் மாறிப்போனது 6 மாதங்களில் நம் வாழ்க்கை முடிந்து போனதே.
வாழ்ந்தது 6 மாதங்களாக இருந்தாலும் நாம் வாழ்ந்த நிமிடங்கள் தந்த நினைவுகள்
பல யுகங்கள் ஆனாலும் மறையாத சுவடுகளாய் மனதில் இருந்து கொண்டே இருக்கும்.

(சி-7714)

மாவடிச்சந்தி,
வட்டுக்கோட்டை.

உங்கள் நினைவுகளுடன்....
மனைவி,தந்தை,தாய்,சகோதரர்கள், சகோதரிகள்,
மச்சான்மார்,மாமன், மாமி, அம்மம்மா, மருமக்கள்


# இராசிபலன்

25.11.2023
கார்த்திகை 09, சனிக்கிழமை
திரியோதசி பிற்பகல் 5.15 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 3.19 மணிவரை
சுபநேரம் -3.12-4.42 மணிவரை
இராகுகாலம்-9.12-10.42 மணிவரை

சனிப்பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்-
உத்தரம்,அத்தம்.

**வளவன்**




எதிர் பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கற்பனை மிகுதியான நாள், கனவுப் பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்,உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள.




தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆளாக நேரிடலாம், பிரயாணங்களின் போது அவதானம் அவசியம்.




குடும்பத்ினரிடையே குதூகலம் கூடும், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.




மனக்குழப்பம் அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பயணங்களால் பலனுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.




பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம்,குடும்பப் பொறுப்புக்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள்.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தன வர்வுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

தேவைக்கு மேல் சேர்ப்பவனுக்கு தேவையற்ற கவலைகள் சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயிலும் இல்ல முகப்புகள்


# இன நல்லிணக்கத்தை சீர்குலைக்குமாம்

## ஆக்கிரமிப்பின் அதி உச்ச வெளிப்பாடு இது

### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

**நினைவேந்தல் நிகழ்வுகளை, இராணுவத் தலையீடு களோ, பொலிஸாரின் அச்சுறுத்தல்களோ இன்றி அமைதியான வழியில் கடைப்பிடிப்பதற்கு வழிவகை செய்வதன் மூலம் இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முன்வாருங்கள் என்று சிங்கள இளையோரை முன்னிறுத்தி பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்ட அவர், தமிழ்த்தேசிய மாவீரர் நாள் நெருங்கியிருக்கும் இந்தக் காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்டிருக்கும் இராணுவக் கெடுபிடிகள் குறித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உறவுகளை இழந்து துயருறுகின்ற நெஞ்சம் எவ்வாறு இருக்கும் என்பதை உணரத் தலைப்படாத அதிகாரக்கரங்கள், அடிப்படை மனிதாபிமான உணர்வுகளைக்கூடப் புறந்தள்ளி இன்னுமின்னும் எங்கள் மக்களை வஞ்சிக்கும் செயற்பாட்டையே மிகக் கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன.

தமது பிள்ளைகளின் கல்லறைகள் அத்தனையும் போரியல் மாண்புக்குப் புறம்பான வகையில் இடித்தும் பெயர்த்தும் அழிக்கப்பட்ட பின்னரும் அந்தக் கல்லறைகள் நிறைந்திருந்த துயிலும் இல்லங்களைத் தமது புனித பூமியாக எண்ணியே தமிழர்கள் இன்றளவும் பூசிக்கிறார்கள்.

திரும்பும் திசையெல்லாம் ஆக்கிரமிப்பின் கால்கள் ஆழ வேரூன்றிப் போயிருக்கும் தமிழர் தாயகத்தில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் மீதான ஆக்கிரமிப்பும் வழிபாட்டுரிமை மீதான தடையும் மீளவும் வலிந்து ஏற்படுத்தப்படக் கூடும் என்ற அடிப்படையில், மக்களிடையே ஆழப்பதிந்திருக்கும் அரசு மீதான நம்பிக்கையீனமும் துயிலும் இல்லத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கிருக்கும் ஆத்ம எதிர்பார்ப்பும் அத்துயிலும் இல்ல வளாகங்களை எல்லைப்படுத்துவதிலும் அலங்கரிப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எமக்கெதிராக அரசு பூச முற்படுகின்ற பயங்கரவாத முலாம் குறித்த எந்தக் குறியீடுகளும் அவற்றில் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆனால் போரை நினைவுபடுத்துகின்ற, நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற எந்தவொரு அடையாளங்களும் இல்லாத வெற்று முகப்புகளை நிறுவியமைக்காக, இதுவரை நான் உட்பட பதின்மூன்று பேர் பொலிஸாரால் தனித்தனியே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.

நினைவேந்தல் உரித்தை நிலைநாட்டுவதற்காக அமைத்த துயிலும்இல்ல முகப்புகள்இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் என்று சிந்திப்பது கூட ஆக்கிரமிப்பின் அதியுச்ச வெளிப்பாடாகவே தென்படுகிறது என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## கவணாடல், வேடுவநடனப் போட்டி வண்ணை நாவலர் மகாவி. முதலிடம்



(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட பரதநாட்டியப் போட்டியில் கவணாடல் குழு நடனம் மற்றும் வேடுவநடனம் ஆகிய இரண்டிலும் 1 ஆம் இடத்தை யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலய மாணவர்கள் பெற்றுள்ளனர்.

அகில இலங்கை தேசிய மட்ட பரதநாட்டிய போட்டி அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. அதில் கவணாடல் குழு நடனத்தில் பெண்களும் வேடுவ நடனத்தில் ஆண்களும் 1 ஆம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் வெளியிடப்பட்டு வந்த மிகவும் பழைமை வாய்ந்த இந்து சாதனம் பத்திரிகை தொடர்ந்தும் புதிய அம்சங்களுடன் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்துசாதனம் பத்திரிகையில் பிரசுரம் செய்வதற்கு ஏற்புடைய சமயக் கட்டுரைகள், ஆக்கங்களை "இந்து சாதனம் சைவபரிபாலன சபை, இல.66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சைவபரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ்தர (NVQ மட்டம் 3,4) மற்றும் டிப்ளோமா தர (NVQ மட்டம் 5,6) கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கைநெறியை பயில விரும்பும் தகுதியுடையோர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவுத்திகதி 15.12.2023 இற்கு முன்னர் விண்ணப்பிப்பதுடன் மேலதிக விபரங்களை dtet.gov.lk எனும் இணையத்தளத்திலும் பார்வையிடலாம். அல்லது தொழில்நுட்பக்கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ 021 22 0028, 021 222 2358 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவோ பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் அறநெறி, பண்ணிசை, மிருதங்கம் ஆகிய கற்கைநெறிகள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

மேற்குறித்த பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய வளவாளர்கள், ஆசிரியர்கள் தங்களது சுயவிபரங்களை "செயலாளர், சைவபரிபாலன சபை, இல.66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சைவபரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)



கார்த்திகை மரம் நடுகை மாதத்தினை முன்னிட்டு கேமா அறக்கட்டளையினால் யா/ செட்டித்தெரு மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பாடசாலை வளாகத்திலும் மரக்கன்றுகள் மாணவர்களால் நாட்டி வைக்கப்பட்டன.

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அமரர்.விமலேந்திரன் கவிதன் நினைவாக ஏழாவது வருடமாக நடத்தப்படும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிதொடக்கம் மதியம் 1 மணி வரை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெறவுள்ளது..

குறித்த இரத்ததான முகாமில் குருதிக்கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய மட்டத்தில் போதை ஒழிப்பு நடவடிக்கை

(கொழும்பு)

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் விசேட அதிகாரி ஒருவரை நியமிக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கிராமிய மட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்காக இதனூடாக எதிர்பார்க்கப்படுவதாக சபையின் தலைவர் ஷாக்ய நாணயக்கார தெரிவித்தார்.

தற்போது கிராமங்கள் தோறும் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது.

எனவே, நாடளாவிய ரீதியிலுள்ள 190 பிரதேச செயலக பிரிவுகளிலும் தலா ஒரு அதிகாரி வீதம் 190 அதிகாரிகளை போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் சிரமங்களை எதிர்கொள்வோர், இது தொடர்பில் குறித்த அதிகாரியிடம் அறிவித்து, போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்கான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியுமென ஷாக்ய நாணயக்கார தெரிவித்தார்.

அத்துடன், கிராமத்தில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டாலும் குறித்த அதிகாரியை தொடர்புகொண்டு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5-6)

# இஸ்ரேல் - காசா போரை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக சிலர் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினரை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்த நிலையில், அவர்களில் 5 பேரை கைது செய்துள்ளனர்.

இஸ்ரேல் - காசா போரை நிறுத்தக்கோரியே ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னால் இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரி
இப்போது...
இல. 191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில் இயங்குகிறது.
(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)
மேலதிக தொடர்புகளுக்கு
076 097 3121
021 222 3378

# ஐ.எம்.எப் இன் இணக்கப்பாடு அடுத்த மாதம் எட்டப்படும்

## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

கடன் தவணைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடு அடுத்த மாதம் எட்டப்படும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான அனைத்து முயற்சிகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தை தெளிவுபடுத்தினார். (நி-5-6)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2024 ஆம்ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது. விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 8:30 தொடக்கம் பி.ப 3:00 வரை பதிவுக்கட்டணம் ரூ.1500.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 29.12.2023 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" -பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை
தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

**பொருட்கள்**

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A -02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்(மரம் / இரும்பு / உருக்கு / ஏனையவை) |
| A -03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A -04 | ஜன்னல், திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A -05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் கல் வகைகள் நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A -06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் |
| A -07 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்பிற்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A -08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்மிதி, மொப்பர் மற்றும் ஏனையவை |
| A -09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள் ,விம், தொற்று நீக்கிகள் கிருமிநாசினிகள் |
| A -10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரியுப் மற்றும் ஏனையவை |
| A -11 | தோலுற்பத்திப் பொருட்கள், கம் புட்ஸ், சப்பாத்துக்கள் |
| A -12 | எரிபொருட்கள் , உராய்வு நீக்கிகள் |
| A -13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A -14 | இரும்பு பொருட்கள் |
| A -15 | கற்கள் மணல் வகைகள் |
| A -16 | தீராந்திகள் ,பலகைகள், சட்டங்கள் |
| A -17 | பனை மரங்கள், சலாகைகள் |
| A -18 | பாதணிகள், தோற்பொருட்கள் |
| A -19 | அலங்காரப் பொருட்கள் |
| A -20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொகுதி இல | சேவைகள் / வேலை விவரம் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழிநுட்ப ஆலோசனையும் வழங்குதல் |
| B -02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B -03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, நிழற்படப்பிரதி இயந்திரம், கணனி , விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரம்.) |
| B -04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும். |
| B -05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், ஏனையவை. |
| B -06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரித்தலும் |
| B -07 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B -08 | கோலவுடை தைத்தல், திரைச்சீலை |
| B -09 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்குதல் |

| தொகுதி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகனதிருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C -02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு. |
| C -03 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

**நிபந்தனைகள்**

1. வழங்கல்கள்/ சேவைகள் 2024ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. வியாபார பதிவு சான்றிதழில் குறிப்பிடப்பட்ட வியாபாரத்தன்மையின் அடிப்படையில் மாத்திரம் பொருத்தமான தொகுதியை தெரிவு செய்தல் வேண்டும்.
3. திருப்திகரமற்ற வழங்கல்கள்/ சேவைகள் நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.
4. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
(C-7716)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# சுரங்கப் பாதையில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் பின்னடைவு

(டில்லி)

**இந்தியாவின் இமயமலை வட்டாரத்தில் இடிந்து விழுந்த சுரங்கப் பாதையில் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.**



உத்தரகாண்ட் மாநிலத்தில் நெடுஞ்சாலைச் சுரங்கப் பாதையின் ஒரு பகுதி இம்மாதம் 12 ஆம் திகதி இடிந்து விழுந்தது. அதில் 41 பேர் சிக்கியிருந்தனர். மீட்புப் பணியினர் பல முயற்சிகள் எடுத்த போதிலும் இன்னும் மீட்க முடியவில்லை.

57 மீற்றர் நீளமுள்ள இடிபாடுகளில் 45 மீற்றர் தூரத்துக்கு குழாய்கள் அனுப்பப்பட்டதால் கடந்த புதன் கிழமை நள்ளிரவுக்கு முன்பாக தொழிலாளர்கள் மீட்கப்பட்டு விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இரவு துளையிடும் பணியில் இடையூறு ஏற்பட்டது. இதனால் துளையிடும் பணிகள் நிறுத்தப்பட்டன.

எனினும் நேற்று முன்தினம் அதிகாலை இடிபாடுகளில் துளையிடும் பணிகள் மீண்டும் தொடங்கின. இதனிடையே இடிபாடுகளில் துளையிட பயன்படுத்தப்பட்டு வரும் 25 தொன் எடை கொண்ட இயந்திரம் வைக்கப்பட்டிருக்கும் தளத்தில் விரிசல் ஏற்பட்டதை தொடர்ந்து, நேற்று முன்தினம் இரவு துளையிடும் பணி மீண்டும் நிறுத்தப்பட்டதாக தகவல் வெளியானது.

இது 12 நாட்களாக தொடரும் மீட்புப் பணியில் மீண்டும் பின்னடைவை ஏற்படுத்தியது. ஆகர் துளையிடும் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு காரணமாக துளையிடும் பணி நிறுத்தப்பட்டது.

இதுவரை சில்க்யாரா சுரங்கப்பாதையில் மீட்புப் படையினர் 46.8 மீற்றர் தூரம் வரை துளையிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 41 தொழிலாளர்களும் மீட்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவிகளை வழங்க அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்க உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள உத்தர் காசி மாவட்டத்தின் சின்யாலிசவுரில் உள்ள சுகாதார மையத்தில் 41 படுக்கைகள் கொண்ட சிறப்பு வார்டு அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களை அங்கு அழைத்து செல்வதற்காக சுரங்கப் பாதைக்கு அருகில் 41 அம்புலன்சுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# தற்க...

# கைதிக...

# தெ...

(காசா)

**தற்காலிக போர...**
**ஒப்பந்தம் மட்டுமே...**
**பிரதமர் பெஞ்சமின்...**



காசாவில் பணயக் கைதிகளை விடுவிப்பதற்காக 4 நாட்களுக்கு போர் நிறுத்தத்தை இஸ்ரேல்

# கடந்த ஆண்டில் மட்டும் 89 ஆயிரம் பெண்கள் படுகொலை

## ஐ.நா அதிர்ச்சித் தகவல்



(நியூயோர்க்)

உலகளாவிய ரீதியில் பெண்கள் மற்றும் சிறுமிகள் படுகொலை செய்யப்படுவது அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த ஆண்டில் மாத் திரம் 89 ஆயிரம் பெண்கள் மற்றும் சிறுமிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் நிர்வாக இயக்கு நர் காடா வாலி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தசாப் தங்களில் மிகவும் அதிகமாக பெண்கள் கொலை இடம் பெற்ற வருடமாக 2022 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது.

இவ்வாறாக பதிவாகியுள்ள பெண் கொலைகளில் 55 வீதமான கொலைகள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர்களால் நடத்தப்பட்டவை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ஆசியாவுக்கு அடுத்தபடியாக ஆபிரிக்காவில் சுமார் 20 ஆயிரம் பெண்கள் மற்றும் சிறுமிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பெண்கள் மற்றும் சிறுமிகள் அதிகளவில் கொலை செய்யப்படுவது கவலையளிப்பதாக காடா வாலி தெரிவித்துள்ளார்.

மனிதகுலம் சமத்துவமின்மை மற்றும் ஆணாதிக்கத்துடன் தொடர்ந்தும் போராடுவதை இந்த நிலை எடுத்துக்காட்டுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த துன்பகரமான போக்கு மற்றும் ஆழமாக வேரூன்றிய சமத்துவமின்மை, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன் முறைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான இந்த நடவடிக்கையை எதிர்ப்பதற்காக, உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் வலுவான மற்றும் செயற்திறன் மிக்க நிறுவனங்களை நிறுவுவதற்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என காடா வாலி வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிறுவனங்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு உரிய தண் டனையை பெற்றுக்கொடு க்கவும், பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், பாதிக்கப் பட்டவர்களுக்கு விரிவான நிவாரணத்தை வழங்குவதற்கும் வழி வகுக்க வேண்டும் என அவர் மேலும் கோரியுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிக போர் நிறுத்தம்

# களை விடுவிக்கும் ஒப்பந்தமே

## தளிவுபடுத்தினார் நெதன்யாகு

**ார் நிறுத்தம் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான மே. ஹமாஸ் அழியும் வரை போர் தொடரும் என இஸ்ரேல் மின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.**





பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே, "இஸ்ரேல் உடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்ட த்தை நெருங்கிவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இது போர் நிறுத் தம் இல்லை என்றும் பணயக் கைதிகளை விடு விப்பதற்கான ஒப்பந்தம் மட்டுமே என இஸ்ரேல் பிரதமர் தெளிவுபடுத்தியு ள்ளார்.

இந்த காலகட்டத்தில் குழந் தைகள், பெண்கள் உள்ளிட்ட 50 பணயக் கைதி களை ஹமாஸ் போராளி கள் விடுவிப்பார்கள் என்று இஸ்ரேல் அரசு அறி வித்து ள்ளது. மேலும் ஒவ் வொரு முறை 10 பணயக் கைதி களை விடுவிப்பதற் கும் கூடுதலாக ஒருநாள் போர் நிறுத்தம் என்ற வகையில் போர் நிறுத்த நாட்களை அதிகரிக்கவும் ஒப்புதல் வழ ங்கியுள்ளது.

இருப்பினும், இது போர் நிறுத்தம் இல்லை என்றும் இது பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தம் மட்டுமே. போர்க்கால அமை ச்சரவை கூடி இந்த முடிவை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்படும் பணயக் கைதிகளின் பட்டியல் இஸ்ரே லுக்கு கிடைத்ததாக தெரிகி றது. இந்த நிலையில் நேற்று காலை 10.30 மணியில் இருந்து நான்கு நாள் போர் நிறுத்தம் தொடங்கியுள்ளது. இதனால் அடுத்த நான்கு நாட்களுக்கு இஸ்ரேல் காசா மீது தாக்குதல் நடத்தாது.

முதலில் பணயக்கைதி களாக உள்ள பெண்கள், அவர்களின் குழந்தைகள் என்ற அடிப்படையில் விடு விக்கப்படுகிறார்கள். அந்த வகையில் ஒரே குடும்பத் தைச் சேர்ந்த 13 பேர் விடு தலை செய்யப்பட இருப்ப தாக தகவல் வெளியாகியுள் ளது. (நி-5-6)

# போர்நிறுத்தத்தின் போதும் அகதிமுகாம் மீது தாக்குதல்

## 30 பேர் உயிரிழப்பு



(காசா)

பாலஸ்தீனக் குழுவிற்கும் இஸ் ரேலுக்கும் இடையே திட்டமிடப் பட்ட போர்நிறுத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள போதும் வடக்கு காசாவில் உள்ள ஜபாலியா அகதி கள் முகாமில் உள்ள ஐக்கிய நாடு கள் சபையுடன் இணைந்த பாட சாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சுமார் 30 பேர் கொல் லப்பட்டதாக ஹமாஸ் கூறியுள்ளது.

பாலஸ்தீன அகதிகளுக் கான ஐ.நா நிவாரண மற் றும் வேலை முகாமையால் நடத்தப்படும் அபு ஹுசைன் பாடசாலையின் மீது நடந்த தாக்குதலில் 27 பேர் கொல் லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சகம் அறிவித்தது. இங்கு காசாவின் பிற பகுதிகளில் வன்முறை மற் றும் தீவிர குண்டுவெடிப்பில் இருந்து இடம்பெயர்ந்த பால ஸ்தீனியர்கள் தஞ்சமடைந் துள்ள பகுதியாகும்.

இதற்கிடையில், இஸ்ரே லிய போர் விமானங்கள், தெற்கு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸில் ஷேக் நாசர் சுற்றுப்புறத்தைத் தாக்கின, இதில் சுமார் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர் என்று அதிகாரபூர்வ பாலஸ்தீனிய செய்தி நிறுவனம் தெரிவித் துள்ளது.

பாலஸ்தீன அதிகாரிகளின் கூற்றுப்படி, இஸ்ரேலின் இடைவிடாத குண்டு வெடிப் புகளில் காசாவில் 14,800 இற் கும் அதிகமானோர் உயிரி ழந்துள்ளனர். (நி-5-6)

# இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா ஏவுகணைத் தாக்குதல்



(ஜெருசலேம்)

லைனான் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக் குதலுக்கு பதிலடியாக இஸ் ரேல் மீது ஹிஸ்புல்லா அமை ப்பு சரமாரியான ஏவுகணை தாக்குதலை நடத்தியுள் ளது.

நேற்று முன்தினம் நடத் தப்பட்ட இந்த தாக்குதலில் சுமார் 80 இற்கும் மேற்பட்ட ரொக்கெட்டுகள் ஏவப்பட்டதாக இஸ்ரேல் படைத்தரப்பு தெரி வித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு லைனான் மீது தாக்குதல் நடத்திய இஸ்ரேல் படையி னர் ஐந்து ஹிஸ்புல்லா உறுப்பினர்களை கொன்ற னர்.

இதற்கு பதிலடியாகவே ஹிஸ்புல்லா அமைப்பு இந்த தாக்குதலை நடத்தி யுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு– கிழக்கில்

# தமிழ் மொழியில் சேவையாற்றக் கூடிய பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் தமிழ் மொழியில் சேவையாற்றக் கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கான பயிற்சிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் இடையில் பல்வேறு காரணங்களால் அது சற்று மந்த நிலையிலேயே காணப்பட்டது. என நீதி, அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் சேவையாற்றக்கூடிய 6000 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மொழி பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.அதன் மூலம் தமிழ் மொழியில் சேவையாற்ற கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய டளஸ் அழகப்பெரும எம். பி அது தொடர்பில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



நாட்டில் 85,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ள நிலையில் அவர்களின் ஒரு வீதமாவது இவ்வாறு தமிழ் மொழியில் செயற்படக்கூடிய உத்தியோகத்தர்கள் கிடையாது. அந்த வகையில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் துறையில் நியமித்துக் கொள்வது தொடர்பான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது அவசியம் என அவர் தெரிவித்தார். (நி-5-6)



கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் அமைந்துள்ள கால்வாய் பகுதியில் தண்ணீர் தேங்கி நிற்பதால் டெங்கு பரவக்கூடிய நிலையை கருத்தில் கொண்டு இராணுவத்தினரால் நேற்று சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

(படம்- தேவானந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 600 | 500 |
| தக்காளி | 400 | 600 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| கோவா | 350 | 300 | 350 | 400 |
| கரட் | 250 | 380 | 380 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 220 | 200 | 250 |
| வாழைக்காய் | 180 | 180 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 300 | 350 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 250 | 220 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 450 | 500 |
| லீக்ஸ் | 300 | 260 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 220 | 200 | 400 |
| கறிமிளகாய் | 600 | 650 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 550 | 700 | 400 | 800 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 350 | 300 |
| கீரை - 1 பிடி | 150 | 140 | 100 | 200 |
| தேசிக்காய் | 1500 | 1300 | 1200 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 160 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 180 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | 200 | 150 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2974

மில்டன்




லதீஷா




துஷ்யா




வசந்




தஜிஸ்




சாதுரா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
பெருமையுடன் வழங்கும் சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும்
மனவளக்கலையின் ஆரம்ப திறனூக்கப்பயிற்சிகள்

* உடல் நலத்திற்கு ⇒எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு ⇒சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு ⇒தியானப்பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு ⇒அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட ⇒தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :25.11.2023 சனிக்கிழமை தொடக்கம் 01.12.2023 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

அறிமுகவுரை :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி T. நித்தியகல்யாணி அவர்கள் (தமிழ்நாடு இந்தியா )

பயிற்சிகளை வழங்குபவர்கள் :- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல 81 பிறவுன் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல :- 0212222772,0768571395,0771235646,0714403268,0777368745

(சி-7716)


# சமய தீட்சையும் சர்வாலய தீபமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம். கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை 6.30 மணிக்கு சமய தீட்சை வழங்கலும் பிற்பகல் 3 மணிக்கு சர்வாலய தீப உற்சவமும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். ( நி-5-6)

# கட்டவேலி பலநோக்கு கூட்டுறவில் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி கட்டவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் வதிரி 15.கிளை உடைக்கப்பட்ட திருட்டு சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில் கடந்த புதன் கிழமை குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன் போது 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொருட்கள் களவு போய் உள்ளது. இதனையடுத்து சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-5-6-60)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலையில் 2023 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்த

செல்வி.ருசானி கலைச்செல்வன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியிலும் ஏனைய கலைகளிலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(17985)

பாடசாலை சமூகம்– யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை இருபாலை, கோப்பாய்.


## Invitation for Bids (IFB)
## Jaffna Municipal Council
## Procurement of Goods
## JMC/PO2/DO/LDSP/2023

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the item listed below:

| S.N | Bid Number | Item | Quantity | Non Refundable fee. |
|---|---|---|---|---|
| 01 | JMC/PO2/DO/LDSP/DC/2023 | Desktop Computer | 14 | 2,000.00 + VAT |
| 02 | JMC/PO2/DO/LDSP/Pri/2023 | Printer | 06 | |
| 03 | JMC/PO2/DO/LDSP/Sca./2023 | Scanner | 02 | |
| 04 | JMC/PO2/DO/LDSP/Pho./2023 | Photocopier | 02 | |
| 05 | JMC/PO2/DO/LDSP/ID.Pr./2023 | User ID card printer | 02 | |
| 06 | JMC/PO2/DO/LDSP/Mul.Pro/2023 | Multimedia projector | 01 | |
| 07 | JMC/PO2/DO/LDSP/Fur/2023 | Cupboard -Steel | 03 | |
| | | Office Table-Melamine | 03 | |
| | | Office Rolling Chair | 03 | |
| 08 | JMC/PO2/DO/LDSP/Cur/2023 | Curtain- material with fitting | | |

2. Bidding will be conducted through National Competitive Bidding.

3. Interested eligible bidders may obtain further information from Commissioner, Jaffna Municipal Council. TP: 021 222 7691 Fax: 021 222 1187 E-Mail: mcjaffnamailv@yahoo.com office hours from 09:00 hrs. to 15:00 hrs.

4. Qualifications requirements include Possessing the minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field. A margin of preference for eligible locally produced goods offered shall not apply. Additional details are provided in the bidding document.

5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of 'Application for Bid Documents available in this office and upon payment of a Non refundable fee on working days from **25th November 2023 until 22nd December 2023 from 09:00 hrs. to 15:00 hrs.** The payment method will be cash or bank draft drawn in favour of **Commissioner, Jaffna Municipal Council.**

6. Each sealed Bids must be dispatched either by registered post or by hand to the address Commissioner, Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna on or before **22nd December 2023 at 15.00 hrs** bid number must be written on the top of the envelop. Late bids will be rejected. Bids will be opened immediately thereafter. Bidders or their authorized representatives may be present at the time of opening bids.All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table above.

7. A pre bid meeting will be held at Commissioner, Municipal Council,Point Pedro Road,Nallur,Jaffna on **14th December 2023** at 15:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Point Pedro Road, Nallur.**

(C-7717)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 337



### இருபதாம் அத்தியாயம்
### இரு பெண்புலிகள்

ஒற்றனைப் பிடித்துக் கட்டி வீதியில் கொண்டு வருகிறார்கள் என்ற செய்தியைத் தாதி ஓடிவந்து தெரிவித்ததும் அங்கிருந்த மூவரின் உள்ளங்களும் பரபரப்பை அடைந்தன. குந்தவையின் உள்ளம் அதிகமாகத் தத்தளித்தது.

“தேவி! நாம் போய் அந்தக் கெட்டிக்கார ஒற்றன் முகம் எப்படியிருக்கிறது என்று பார்க்கலாமா?” என்றாள் நந்தினி.

குந்தவை தயக்கத்துடன், “நமக்கென்ன அவனைப் பற்றி?” என்றாள்.

“அப்படியானால் சரி!” என்று நந்தினி அசட்டையாய்க் கூறினாள்.

“நான் போய்ப் பார்த்து வருகிறேன்” என்று கந்தன் மாறன் தட்டுத்தடுமாறி எழுந்தான்.

“வேண்டாம் உம்மால் நடக்க முடியாது, விழுந்துவிடுவீர்!” என்றாள் நந்தினி.

குந்தவை மனத்தை மாற்றிக் கொண்டவள் போல், “இவருடைய அருமையான சிநேகிதன் எப்படியிருக்கிறான் என்று நாமும் பார்த்துத்தான் வைக்கலாமே! இந்த அரண்மனை மேன்மாடத்திலிருந்து பார்த்தால் தெரியுமல்லவா?” என்று கேட்டாள்.

“நன்றாய்த் தெரியும் என்னுடன் வாருங்கள்!” என்று நந்தினி எழுந்து நடந்தாள்.

கந்தன்மாறன், “தேவி! அவன் என் சிநேகிதனாயிருந்தால், மாமாவிடம் சொல்லி, நான் அவனைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்ய வேண்டும்!” என்று சொன்னான்.

“அவன் உமது சிநேகிதன் தானா என்று எங்களுக்கு எப்படித் தெரியும்?” என்றாள் நந்தினி.

“அப்படியானால், நானும் வந்தே தீருவேன்!” என்று கந்தன்மாறன் தட்டுத்தடுமாறி நடந்தான்.

மூவரும் அரண்மனை மேன்மாடத்தின் முன் முகப்புக்குச் சென்றார்கள். சற்றுத் தூரத்தில் ஏழெட்டுக் குதிரைகள் வந்து கொண்டிருந்தன. அவற்றின் மீது வேல் பிடித்த வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். குதிரைகளுக்கு மத்தியில் ஒரு மனிதன் நடந்து வந்தான். அவன் கைகளை முதுகுடன் சேர்த்துக் கயிற்றினால் கட்டியிருந்தது. அந்தக் கயிற்றின் இரு முனைகளை இரு பக்கத்திலும் வந்த குதிரை வீரர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

வீரர்களுக்குச் சற்றுத் தூரத்தில் வேடிக்கை பார்க்கும் கும்பல் வந்து கொண்டிருந்தது.

அரண்மனை மாடத்திலிருந்து பார்த்தவர்களுக்குக் குதிரைகளுக்கு நடுவில் நடந்து வந்த மனிதனின் முகம் முதலில் தெரியவில்லை.

ஊர்வலம் அருகில் வரும் வரையில் அந்த அரண்மனை மேன்மாடத்தில் மௌனம் குடி கொண்டிருந்தது.

குந்தவையின் ஆவலும், கவலையும், ததும்பிய கண்கள் நெருங்கி வந்த ஊர்வலத்தின்மீது லயித்திருந்தன.

நந்தினியோ வீதியில் எட்டிப்பார்ப்பதும் உடனே குந்தவையின் முகத்தைப் பார்ப்பதுமாயிருந்தாள்.

கந்தன்மாறன் அங்கே குடி கொண்டிருந்த மோனத்தைக் கலைத்தான்.

“இல்லை இவன் வந்தியத்தேவன் இல்லை!” என்றான்.

குந்தவையின் முகம் மலர்ந்தது.

அச்சமயம் அந்த விநோதமான ஊர்வலம் அரண்மனை மாடத்தின் அடிப்பக்கம் வந்திருந்தது. கயிற்றினால் கட்டுண்டு குதிரை வீரர்களின் மத்தியில் நடந்து வந்தவன் அண்ணாந்து பார்த்தான். வைத்தியர் மகன் அவன் என்பதைக் குந்தவை தெரிந்து கொண்டாள்.

குந்தவை தன் மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொள்ளாமல் “இது என்ன பைத்தியக்காரத்தனம்? இவனை எதற்காகப் பிடித்து இழுத்து வருகிறார்கள்? இவன் பழையாறை வைத்தியர் மகன் அல்லவா?” என்றாள்.

அண்ணாந்து பார்த்தவன் ஏதோ சொல்ல எண்ணியவனைப் போல் வாயைத் திறந்தான்.(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முதல் வழக்கில் வெற்றி

(நேற்றைய தொடர்ச்சி)

இப்போது பணம் தராமல் ஏமாற்றுகிறானா?” என்று அக்பர் கேட்டார்.

“இல்லை பிரபு! இவன் திடீரென வழக்கறிஞனாகப் பணிபுரியும் யோசனையை கைவிட்டு விட்டான். அந்தத் தொழிலில் ஈடுபடப் போவதில்லையாம்! என்றார். உடனே அக்பர் அந்த இளைஞனை நோக்கி, எதற்காக உன்னுடைய உத்தேசத்தை நீ மாற்றிக் கொண்டாய்? என்று கேட்டார்.

பிரபு! நான் சட்டம் பயின்று முடித்ததும் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடுவதாகத்தான் இருந்தேன்.



ஆனால் என் சித்தப்பா திடீரென இறந்து போனார். அவர் தன்னுடைய உயிலில் அவருடைய அனைத்து சொத்துகளுக்கும் என்னை வாரிசாக்கி விட்டார். இப்போது நான் லட்சாதிபதி. அதனால் எந்த வேலையும் செய்யத் தேவையில்லை என்றான்.

அப்படியானால் இவருடைய தட்சிணை என்ன ஆவது?” என்று கேட்டார் அக்பர். நான் கொடுத்த வாக் கைக் காப்பாற்று வேன். எனக்கு என்று வழக்கறிஞனாக ஆக வேண்டும் என்று தோன்றுகிறதோ, அப்போதுதான் தட்சிணையும் தர முடியும் என்றான்.

பிரமோத் பிஹாரி கூறுவது சரியே என்று நினைத்தார் அக்பர். உடனே அவர் நீதிபதியை நோக்கித் தீர்ப்பு வழங்கக் கூறினார்.

நீதிபதி அவர்கள் இருவரையும் நோக்கி, இரு தரப்பினரின் வாதத்தையும் கூர்ந்து கவனித்தேன். என்னைப் பொறுத்தவரை இந்த வழக்கில் பிரமோத் பிஹாரியின் பக்கமே நியாயம் இருக்கிறது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன் என்று இந்த தர்பாரில் அவன் உறுதி அளித்துள்ளான்.

அவன் சொல்லை ஏற்றுக் கொண்டு, அவனுக்கு என்று வழக்கறிஞராக வேண்டும் என்று தோன்றுகிறதோ, அன்று அந்தத் தொழிலில் ஈடுபட்டு குருவின் தட்சிணையைத் திருப்பித்தரலாம்.

அதுவரை குரு காத்திருக்க வேண்டும். இதுவே என் தீர்ப்பு! என்றார். அக்பர் உட்பட தர்பாரில் அனைவரும் இந்தத் தீர்ப்பைப் பாராட்டினர். இதை எதிர்பார்க்காத கிழவர் ஏமாற்றத்தினாலும், வருத்தத்தினாலும் உடல் குறுகிப் போனார்.

ஆனால் பீர்பால் மட்டும் தீர்ப்பைப் பாராட்டாமல் மிகவும் மௌனமாக இருந்ததை கவனித்த அக்பர், இந்தத் தீர்ப்பை மறுஆய்வு செய்யுமாறு பீர்பாலிடம் கூறினார். அதைக்கேட்டதுமே கிழவரின் முகம் மலர்ந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனதையும் புத்தியையும் அன்பு மற்றும் பரிவோடு ஆளத் தெரிந்தவரே பிறரை வழிநடத்தத் தகுதியானவர். ~ பிரம்மா குமாரிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நவம்பர் 26ஆம் திகதி கார்த்திகை தீபத் திருநாள்

நாளை நவம்பர் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கார்த்திகைத் தீபத் திருநாள்.

கார்த்திகை விளக்கீடு என்று நடைமுறையில் பேசப்படும் கார்த்திகைத் தீபத் திருநாள் சைவ மக்களின் புனிதமான வழிபாட்டு நாள்.

கார்த்திகை விளக்கீடு பற்றிப் பேசுவதாக இருந்தால், திருவண்ணாமலையில் இருந்து தொடங்க வேண்டும்.

எனவே அது இவ்விடத்தில் பேசுவது பொருத்தப்பாடற்றது என்பதால் அதனை ஒருபுறம் வைத்துக் கொள்ளலாம்.

அதுசரி கார்த்திகைத் தீபத் திருநாள் பற்றி ஆசிரியர் தலையங்கம் எழுதுகின்ற அளவுக்கு என்ன நடந்தது என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒருமுறை கார்த்திகை மாதத்தில் இரண்டு பூரணைப்பட்சம் வந்துற்றது.

இதில் கார்த்திகை விளக்கீட்டை எந்தப் பட்சத்தில் செய்வது என்ற பஞ்சாங்கக் குழப்பம் ஏற்பட, மக்கள் தாமாகவே தீர்மானம் எடுத்தனர்.

இதில் நவம்பர் 27இல் ஒருபூரணைப் பட்சம் வந்தமையால் அன்றைய நாளில் ஒரு பகுதி மக்கள் வீடுகள் தோறும் கார்த்திகைத் தீபம் ஏற்றி வழிபாடு செய்தனர்.

இவ்வாறு நவம்பர் 27 அன்று கார்த்திகைத் தீபம் ஏற்றியவர்களைப் படையினர் கடுமையாக தண்டித்தும் எச்சரித்தும் சிலரை அழைத்துச் சென்று விசாரணை நடத்தியும் பெரும் அமளியை ஏற்படுத்தியிருந்தனர்.

நவம்பர் 27 மாவீரர் நாள் என்பதால் படையினர் அவ்வாறு நடந்து கொண்டதாகக் கூறப்பட்டது.

அவ்வாறானதொரு நிலைமை இம்முறையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதாலேயே கார்த்திகைத் தீபத் திருநாள் பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஆம், நாளை நவம்பர் 26. கார்த்திகை விளக்கீடு. அன்றைய நாள் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 69ஆவது பிறந்த நாளாகவும் உள்ளது.

எனவே நவம்பர் 26 மாலைப் பொழுதில் மக்கள் வீடுகள் தோறும் தீபங்கள் ஏற்றி கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டிக்கும் போது அதனை விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்தநாளுடன் தொடர்புபடுத்திப் படைத் தரப்பும் பொலிஸாரும் அடாவடித்தனம் புரிந்து கார்த்திகை தீபத் திருநாளை குழப்பியடிக்கலாம்.

ஆகையால் நாளை நவம்பர் 26 பூரணை பட்ச கார்த்திகை விளக்கீடு என்பதையும் கார்த்திகை தீபத் திருநாள் சைவ மக்களின் மேன்மையான வழிபாட்டு நாள் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வீதியினை ஊடறுத்து செல்லும் சாத்தியம்

## சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ

கொக்குதொடுவாய் மனித புதைகுழியானது வீதியினை ஊடறுத்தும் ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. என முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஐந்தாவது நாளாக நேற்று இடம்பெற்றது. நேற்றையஅகழ்வு பணியானது நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஐந்தாவது நாளாக தொடரும் கொக்குதொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின்போது நான்கு மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் குண்டு சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பேனா மாக்கர் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் ஸ்கானர் மூலம் இந்த புதைகுழியானது எவ்வளவு தூரம் பரந்து வியாபித்துள்ளது என பரிசோதனை செய்யப்பட்டது இதன் முடிவுகள் இன்றையதினம் அகழ்வு பரிசோதனை பணி நிறைவுற்றதன் பிற்பாடே கிடைக்கப்பெறும் என்றார். (ம-7,299)

# பொன்னாலையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை பகுதியில் நேற்று 4 கிலோ 470 கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரிடம் பாரப்படுத்தப்படவுள்ளார். அதன் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார். (ம-7,104)

# யாழ் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம்

## பொதுமக்கள் பார்வைக்காக

யாழ். மாநகரசபையின் 2024 ஆம் ஆண்டிற்கான பாதீடு(வரைபு) 2023.11.25 தொடக்கம் 2023.12.09 ஆம் திகதி வரை யாழ். மாவட்டச் செயலகம், யாழ். பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம், யாழ் மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி, நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம் ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இவ்வரைபு பாதீட்டினை மேலும் முன்னேற்ற கரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2023.12.09 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாநகர சபையின் பொதுசனத் தொடர்பு பகுதிக்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு யாழ்மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவுத்துள்ளார். (ம-7)

# வண்ணச்சிட்டுக்கள் நூல் வெளியீடு

கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன் அவர்களின் "வண்ணச்சிட்டுக்கள்" நூல் வெளியீடானது இன்று மாலை 4.00 மணியளவில் திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் தலைவர் ச.பிரசன்னா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையினை பம்பலபிட்டி சைவ மங்கையர் நூலகர் செல்வி க.ஹாயத்திரி சண்முகநாதன் அவர்களும் நூல் மதிப்பீடுஉரையையாஅம்பன் அ.மி.த.க பாடசாலையின் ஆசிரியர் திருமதி புவிரஞ்சன் நளாயினி அவர்களும் வாழ்த்துரையை யாழ் மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் இ.கிருஸ்ணகுமார் அவர்களும் வழங்கவுள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ் மானிப்பாய், கொமர்ஷல் வங்கி-மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி-மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர், மானிப்பாய் மக்கள் வங்கி ஸ்டான்லி வீதி, ராஜா தியேட்டர், கஜமுகன் வன்பொருள் வளாகம், லிங்கம் கிறீம் கவுஸ், என்.எஸ்.ஆர் வளாகம், மணிக்கூட்டு கோபுர வீதி, பழைய தபால் அலுவலக ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, றொசல் கட்டிடம், வெலிண்டன் சந்தி, விலிங்டன் வின்சர் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** முகாமைத்துவ பயிற்சி மையம்-கனகபுரம், சிவனருட் செல்வன் அரிசிஆலை, உருத்திரபுரம் பலநோக்குக் கூட்டுறவு சபை அரிசி ஆலை ,அம்பாள்குளம் , ஜெயந்தி நகர், கனகபுரம், அப்பன் மோட்டர்ஸ் நிலையத்தடி (கனகபுரம்), கோப்சிற்றியடி (கனகபுரம்), சிவநகர், ஆனந்தநகர், திருநாவிடுதி, உருத்திரபுரம், உருத்திரபுரம் கிழக்கு இந்துக் கல்லூரி, ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023**

**"அறச் செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"**

*- கௌதம புத்தர்*

JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
**16 Days of Activism against Gender Based Violence**
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பால்நிலை வன்முறைகளை இல்லாதொழிக்க தனி மனித மற்றும் சமூகப் பங்களிப்பும், பொறுப்புணர்வும் இன்றியமையாதது. பொறுப்புணர்ந்து செயற்படுவோம்!."

16 ♀ 2023

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க சர்வதேச நாணய நிதியம் செய்த பரிந்துரைகள் பற்றிய ஒரு மேலோட்ட பார்வை

07



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஒரு குறிப்பிட்ட திட்டமிடலின்படி, பொருளாதார சீர்திருத்தங்கள் அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளை இலக்காக கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும். முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவது அவசியம். அதற்கு இடையூறாக இருக்கும் காலாவதியான சட்டங்கள் மற்றும் வரி முறைகளை மாற்றுவது மிகவும் முக்கியம். மேலும் நமது வர்த்தகக் கொள்கையில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும். தொழிலாளர் மற்றும் நிலச் சந்தைகளில் உள்ள சிக்கல்களைக் கண்டறிந்து சீர்திருத்த வேண்டும்.

நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை வெளிப்படைத் தன்மையுடன் சீர்திருத்துவதும் அவசியம். மேலும் நிதி மற்றும் நிதிக் கொள்கைகளை சரிசெய்ய ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவது விரைவில் செய்யப்பட வேண்டும். நாம் வந்திருக்கும் தவறான பாதையை சரி செய்வதற்காக இந்தத் திருத்தங்களைச் செயற்படுத்துவது முக்கியம்.

இந்த அனைத்து சீர்திருத்தங்கள் குறித்தும் பொதுமக்களுடன் உரையாடலை உருவாக்குவது மிக முக்கியமான விடயம். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஊழல் ஒழிப்புச் சட்டம் மற்றும் மத்திய வங்கிச் சட்டம் தொடர்பில் பொதுமக்களுடன் கலந்துரையாடுவதையோ அல்லது மக்களின் கருத்தைப் பெறுவதையோ நாம் காணவில்லை. ஜனநாயக அமைப்பில் பொதுமக்களிடம் கருத்து கேட்டு இவற்றைச் செய்ய வேண்டும். இலங்கையில், சட்டமன்ற விவகாரங்களிலும் பொதுக்கொள்கைகளை வகுப்பதிலும் பொதுமக்களின் கருத்தைப் பெறுவது பலவீனமான நிலையில் உள்ளது.

கடந்தவாரம், கடன்தர மதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச்ரேட்டிங்ஸ், இலங்கையின் உள்நாட்டு கடன் தரவரிசைகளை CC இலிருந்து C க்கு குறைத்தது. அதற்குக் கீழே உள்ள தரமானது உள்ளூர் கடன் இயல்பு நிலை வகையாகும். இந்த மதிப்பீடுகளின் முக்கிய அம்சம் என்னவென்றால், பொருளாதார மற்றும் நிதி ஸ்திரத்தன்மை இதுவரை நிறுவப்படவில்லை. பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்காக சில விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் அந்த அமைப்பில் மாற்றம் ஏற்படாத வகையில் மறுமலர்ச்சி அர்த்தமற்றது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

### சர்வதேச நாணய நிதியத்தின் பணியின் முதல் மதிப்பாய்வில் இருந்து 5 முக்கிய விடயங்கள்

இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முதல் மீளாய்வுக்காக இலங்கை வந்த சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் குழு அதன் அவதானிப்புகளை கடந்த செப்டெம்பரில் வெளியிட்டது.

இலங்கையின் ஆழமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தேவையான சீர்திருத்தங்களின் வேகத்தை தக்க வைத்து, பேச்சுவார்த்தைகள், ஊழியர்கள் மட்டத்தில் உடன்படிக்கையை விரைவில் எட்டுவதற்கு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என அவர்கள் வலியுறுத்தினர். மேலும் உடன்படிக்கையானது பணியாளர் மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் வரை இலங்கையின் இரண்டாவது கடன் தவணையைப் பெறுவது தாமதமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் இலங்கைக்கு வருகை தந்த தூதுக்குழுவினர் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க, திறைசேரி செயலாளர் எம்.கே. எம். மஹிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்க மற்றும் மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார்துறை பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி பங்காளிகள் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

சர்வதேச நாணய நிதிய பணியின் தலைவர் பீட்டர் ப்ரூவர், கடன் திட்டத்தின் கீழ் சுமார் 330 மில்லியன் டொலர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்டத்திலான ஒப்பந்தம் எட்டப்பட்ட பின்னரே வெளியிடப்படும் என்றும் அது எப்போது நடக்கும் என்பதற்கு குறிப்பிட்ட காலக்கெடு எதுவும் இல்லை என்றும் கூறினார்.

### 1.இலங்கையின் சமீபத்திய பொருளாதார நிலைமை

ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்டாலும் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிகளின் அவதானிப்புகளின் படி, இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான தற்காலிக அறிகுறிகளைக் காட்டியுள்ளது. 2022 செப்டெம்பரில் 70 சதவீதமாக இருந்த பணவீக்க விகிதம் ஒரு வருடத்திற்குப் பிறகு, செப்டெம்பர் 2023 இற்குள் 2 சதவீதத்திற்கும் குறைவாகக் குறையும் என்ற எதிர்பார்ப்பை அவர்கள் பாராட்டுகிறார்கள்.

மக்கள் குறிப்பிடத்தக்க நெகிழ்ச்சியை வெளிப்படுத்தியதையும் அவர்கள் அவதானித்துள்ளனர். கடினமான ஆனால் அவசியமான நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாகவே இலங்கை இந்த பாராட்டத்தக்க நிலையை அடைந்துள்ளதாக அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பொருளாதாரத்தின் சுருக்கம் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வேகம் குறைந்து வருவதையும் அது காட்டுகிறது. இந்த ஆண்டு மார்ச்-ஜூன் காலத்தில் மொத்த சர்வதேச கையிருப்பு $1.5 பில்லியன் அதிகரித்துள்ளது.

### 2. வரி வசூல் நெறிப்படுத்துதல்

வரி வசூல் மூலம் வருவாய் திரட்டுவது மிகவும் முக்கியமானது என்பதை தூதுக்குழு காட்டியுள்ளது. ஆண்டு இறுதியில் வரிவருவாய் குறைவதால் அரசு மீண்டும் பொது சேவைகளை வழங்குவதில் தடை ஏற்படும் என சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், வரிவிலக்குகள், வரி ஏய்ப்புகளை நீக்கி மீண்டும் வசூலிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையெனில், அது கடன் நிலைத்தன்மையை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் என்று IMF பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### 3.புதிய சட்டங்களுக்கு ஒரு பாராட்டு

கட்டமைப்பு சீர்திருத்தங்களில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள தூதுக்குழு, அண்மையில் நிறைவேற்றப்பட்ட மத்திய வங்கிச் சட்டம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களை உரிய முறையில் நடை முறைப்படுத்தினால் இந்த நிலைமையை மேம்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்கால சீர்திருத்த முன்மொழிவுகளை முன்வைக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

### 4. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் முன்னேற்றம்

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறையிலும் வெளி கடனாளிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமும் அதிகாரிகள் கடன் நிலைத்தன்மையை பராமரிக்க முடிந்ததை பிரதிநிதிகள் குழு கவனித்தது.

நிதிக்கட்டுப்பாடு, மூலதனம் மற்றும் பணப்புழக்கம் ஆகிய வற்றைப் பேணுவதற்கான திட்ட வரைபடத்தைத் தயாரிப்பதிலும் அவர்களின் கவனம் செலுத்தப்பட்டு நிதி நிலைத்தன்மையை உறுதிப்படுத்துகிறது.

இந்த முதலாவது மீளாய்வுக்கு நிறைவேற்று சபையின் அனுமதியைப் பெறுவதற்கு இலங்கை ஏற்கனவே மேற்கொண்டு வரும் கடன் மறுசீரமைப்பு பூர்த்தி செய்யப்பட வேண்டும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது இலங்கையின் கடன் இலக்குகளை சரியான நேரத்தில் சந்திக்க உதவும் என்றும் கடன் தீர்வு தொடர்பான நம்பகத்தன்மையை உருவாக்கும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

### 5. கடினமான காலங்களில் இலங்கைக்கு ஆதரவு

சமூகபாதுகாப்பு சூழலை நடைமுறைப்படுத்துதல், அவற்றின் போதுமான தன்மை மற்றும் உள்ளடங்கல் எல்லையை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட புதிய தகுதி அளவுகோல்களுடன் புதிய நலன்புரி நன்மைகள் செலுத்தும் முறையை அறிமுகப்படுத்தியதை அவர்கள் பாராட்டியுள்ளனர்.

தூதுக்குழுவிற்கும் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் வருவாய் சேகரிப்பு இலக்குகள், ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் ஏனைய முக்கியமான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான தமது திட்டங்களை அதிகாரிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வார்கள்.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம் என்று கூறியது. அத்துடன் எதிர்காலத்தில் பணியாளர் ஒப்பந்தத்திற்கு நகர்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

வாசல் முன்னால் பயணித்துக் கொண்டிருந்தபோது நகரப் பகுதியில் இருந்து வந்த துவிச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும், அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

குறித்த விபத்தில் வவுனியா, நெடுக்குளம் பகுதியைச் சேர்ந்த கும்புகே கெதர முத்துபண்டா (வயது-71) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,250,316)

## மகிந்தவுக்கு...

பட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கொழும்பில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்திற்கு முன்பாக சென்று, மகிந்தவை கொலை செய்வதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கிரிவெல பகுதியை சேர்ந்த இராணுவ சிப்பாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-7)

## க.பொ.த...

எப்போது வெளியாகும் என மாணவர்கள் ஆர்வமாக காத்திருக்கின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் ஓரிரு நாட்களில் வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், பொதுப் பரீட்சை பெறுபேறுகளை இன்னும் இரண்டு நாட்களில் வெளியிட முடியும் என அண்மையில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மாவீரர் நாள்...

களில் குறித்த நினைவேந்தல் செய்வதை தடைவிதிக்க கோரி பொலிஸாரால் போடப்பட்ட தடையுத்தரவு மறுக்கப்பட்ட நிலையில் இவ்வளவு காலம் அமைதியாக செயற்பட்ட முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நேற்று மாலை தடை உத்தரவு கோரி சென்றுள்ளனர்.

நீதிமன்றம் நேற்று முடிவடைந்து சட்டத்தரணிகள் யாரும் அற்ற நிலையில் நினைவேந்தலை எவ்வாறாயினும் தடைசெய்து விட வேண்டும் எனும் நோக்கில் பொலிஸார் இவ்வாறான முனைப்பினை காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-7,299)

## அனைத்து...

பாட்டுக் குழுவின் உப தலைவர் அருணாசலம் வேழமாலிகிதன் கருத்துத் தெரிவிக்கையில்,

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தினுடைய மாவீரர் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை 27ஆம் நாள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இம்முறை துயிலுமில்ல வளாகம் 2007ஆம் ஆண்டு வரை மாவீரர்களாக இருந்த மாவீரர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டு 'அ' தொடக்கம் 'ஈ' வரையான வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் இருந்த கல்லறைகள் மற்றும் நினைவுக் கற்கள் என்பவற்றினுடைய பெயர் விபரங்கள் குறித்த வலயங்களில் பெயரிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

2007, 2008, 2009ஆம் ஆண்டு வரையும் மாவீரர்களானவர்களது பெயர் விபரங்கள் இதுவரையும் எமக்கு கிடைக்கப் பெறவில்லை. அத்தகைய விபரங்கள் கிடைத்தால் எதிர்வரும் காலங்களில் ஒழுங்குபடுத்தப்படும் என்றார்.

(ம-7,100,104)

## தனியார்...

மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனியார் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் என்ற வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நாம் முன்வைத்திருப்பது, நாடு மிகை பணவீக்கமாக மாறுவதைத் தடுப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டே எனத் தெரிவித்திருந்தார்.

இந்த இலக்கை அடைய கடுமையான நிதி கட்டுப்பாடு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன. இந்த முயற்சியின் விளைவாக, செப்ரெம்பர் 2023க்குள் பணவீக்கத்தை 0.80% ஆகக் குறைத்துள்ளோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார்.

(ம-7)

## நினை...

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூரும் வகையில் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முயற்சிப்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி, பொலிஸ்மா அதிபர் (IGP) மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் (TID) பணிப்பாளர் நேற்று வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், அத்தகைய நபர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம இந்த உறுதிமொழியை வழங்கினார்.

நவம்பர்27 ஆம் திகதி வடக்கு மற்றும் கிழக்கில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி இலங்கை இராணுவத்தின் ஓய்வு பெற்ற புலனாய்வு அதிகாரியினால் தாக்கல் செய்யப்

## பாடசாலைகளுக்கு நீண்ட விடுமுறை

(கொழும்பு)

இந்த வருடத்திற்கான பாடசாலை விடுமுறைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி வரை இந்த விடுமுறை வழங்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சமன் பிரியா ஹேரத் எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(ம-7)

பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டள்ளது.

(ம-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3550 — சீட்டிழுப்பு திகதி 24.11.2023 — C 28 36 50 62 — C 01154 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2023.11.24 — சீட்டிழுப்பு இலக்கம் 1338 — B 14 20 30 52 B — 17898

லக்கி 7 VIP — திகதி 2023.11.24 — சீட்டிழுப்பு இலக்கம் 134 — R 6 0 8 8 3 5 R

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.24 — சீட்டிழுப்பு இலக்கம் 0617 — மகரம் 10 35 41 49 மகரம் — 08489 — 09

மெகா பவர் — திகதி 24/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1655 — H 11 06 18 30 80 — 54630

மஹஜன சம்பத — திகதி 2023/11/24 — சீட்டிழுப்பு இலக்கம் 5308 — T 3 7 3 6 7 1

உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி 24.11.2023 — வெற்றி வாரம் 016 — M 7 5 6 7 5 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 22,136,599.20 — DLB — தொலை பேசி: 011-2 333 546-47 — Web : www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2282 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.11.24 — தினம் வெள்ளிக்கிழமை — 01 41 69 73 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,955,700/-

சனிதா — திகதி 2023.11.24 — வெற்றி வாரம் 4443 — வர்ணம் செம்மஞ்சள் — 07 13 28 72 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,841,108.00

சசிரி — வெற்றி வாரம் 406 — சீட்டிழுப்பு திகதி 2023.11.24 — பச்சை — 01 37 38 — 08 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,871,920/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3994 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.11.24 — தினம் வெள்ளிக்கிழமை — 08 20 28 56 ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,191,184/-

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — H 06 02 20 46 69 — 1458 — 2023.11.24 வெள்ளி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 469,134,934.20

அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் : 2108 — சீட்டிழுப்பு திகதி : 2023.11.24 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,429,784/- — 04 23 28 44 R


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

(C-7722)

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது >30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

**CIMS COLLEGE** (C-7722)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## TECHNO WORLD

" INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

### இலவசக் கருத்தரங்கு

**29 November 2023**
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

**30 November 2023**
பொறியியல் தொழினுட்பவியல்
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

' காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை'

இடம் : வெலிங்டன் சந்தி,லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்

(C-7719)

077 017 5346

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## காணி விற்பனைக்கு

கீரிமலை மாதகல் வீதியில் கடற்கரை காணி 32 பரப்பு விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு
077 147 6526 (17972)

## Architectural CAD Center

2D-Drawing
3D-Modeling
Isometric Drawing

**Auto CAD**

Personal & Group Classes
Jaffna- Kilinochchi-Vavuniya

Lecturer by Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D&3D)
Unversity of Peratheniya
Cert.in Advance 3D-Modeling in Auto CAD
Unversity of Moratuwa
Link: 0775116320 - 071-8617972 (17981)

## A/L ICT வகுப்புக்கள் திரு.இ.குமரன்

**A/L 2025**
Computer System
Boolean Algebra
அடுத்தது
Computer Networks
Operating System

**A/L 2023 Paper**

**A/L 2024**
Database Systems
அடுத்தது
Python Programming
Paper Class

Computer Lab
Study Guide
Unit Exam
Past Papers

வடக்கில் ICT பாடத்தில் அதிக A சித்தி பெறும் ஒரே நிறுவனம்
ICT துறையில் 20 வருட கற்பித்தல் அனுபவம்
100% Practical-Oriented Class

MIS ICT COLLEGE TP:0776577359 (17979) #74, Sabapathy Lane, Jaffna.

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17945)

## வாடகைக்கு அறைகள் தேவை

மருத்துவபீட 8 மாணவிகள் தங்குவதற்கு வைத்தியசாலைக்கும் மருத்துவபீட கல்லூரிக்குமிடையில் சகல வசதிகளுடன் கொண்ட அறைகள் தேவை.
வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : எஸ்.கே.அன்னலிங்கம் J.P
077 628 2795 (17971)

## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(17989)

071 173 3911,
076 853 5022, 076 213 7239

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26.01.1932 மறைவு: 06.12.2022
அமரர் கதிரித்தம்பி வேலும்மயிலும்

தோற்றம்: 19.01.1944 மறைவு: 22.04.2022
அமரர் வேலும்மயிலும் மங்களேஸ்வரி

காலம் மற்றுமொரு வருடமென ஓடி நகர்கையிலும்
இருவரது நினைவுகளும் எங்களை, உங்களுடனே
எப்போதும் அணைத்துச் செல்கிறது

அன்பினால் அனைவரையும் இணைத்து
அறிவையும், ஆளுமையையும் புகட்டிய உங்கள்
நினைவுகளில் நின்று மீண்டு எழுகிறோம் (17976)

கோவில்வாசல்,
இணுவில் மேற்கு.

நீங்கா நினைவுகளுடன் : குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km,
- திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(17975)

தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389,
077 986 5457

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 309/= (Max 3Kg) |
| 1 Kg கோதுமை மா | - 181/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg அரிசி மா | - 193/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 297/= (Max 3Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 435/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 170/= |
| 10Kg விஜிதா நாடு | - 1950/= |
| 1 L தேங்காய் எண்ணெய்(Bulk) | - 575/= |
| 400g அங்கர் | - 1025/= ~~(1080/=)~~ |
| 70g Baby Soab | - 108/= ~~(145/=)~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 137/= ~~(175/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(480/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |

1025/= Anchor ~~1080/-~~

(17993)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org